பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
10 11 2024 **SUNDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பொதுத்துறை வங்கிகள் இந்த நிதியாண்டில் 5 லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. திரைப்படத் தயாரிப்பு மற்றும் ஊடகங்களின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. மாணவர்கள் கல்வியை தடையின்றி கற்க அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. பருவமழையை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

>>>><<<<

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பொதுத்துறை வங்கிகள் இந்த நிதியாண்டில் 5 லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தேசிய சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் சார்பில் பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், இந்த துறைக்கான கடனுதவி 9 புள்ளி இரண்டு சதவீதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதுவரை தனியார் வங்கிகள் 25 சதவீதம் கடன் வழங்கியுள்ளதாகவும் அதேநேரத்தில் பொதுத்துறை வங்கிகள், 39 சதவீதம் அளவிற்கு கடனுதவிகளை அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கடன் காப்புரிமை திட்டத்தின் கீழ் 100 கோடி ரூபாய் வரை கடனுதவி வழங்க அடுத்து நடைபெறவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களிடமிருந்து 25 சதவீதம் அளவிற்கு பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும் என்று அரசு துறை நிறுவனங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியதன் அடிப்படையில்,

இத்துறை மேலும் வளர்ச்சியடைந்துள்ளதாக திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பல்வேறு இடங்களிலிருந்து பல்வேறு சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள் பங்கேற்றனர்.

தமிழகத்தில் தென்காசி, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

முத்ரா திட்டத்தின் கீழ், தற்போது 10 லட்சம் ரூபாய் வழங்கப்பட்ட நிலையில், சிறு குறு தொழிலாளர்களின் நலன் கருதி 20 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க முன்வந்துள்ளதற்கு மத்திய அரசுக்கு தொழில் முனைவோர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

>>>><<<<

திரைப்படத் தயாரிப்பு மற்றும் ஊடகங்களின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், 55வது சர்வதேச இந்திய திரைப்பட விழா மற்றும் ஃபிலிம் பஜார் 2024 உலக ஒலி – ஒளி பொழுதுபோக்கு மாநாடு அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் 5 ஆம்

தேதி முதல் 9ஆம் தேதி வரை தில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவித்தார்.

இதன் மூலம் சர்வதேச அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்படும் என்றும் அவர் கூறினார்.

புதிய ஒலிபரப்புக் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும் என்றும் திரு. எல். முருகன் தெரிவித்தார்.

>>>><<<<

கல்வி தான் செல்வம், அதனை தடையின்றி நல்லமுறையில் கற்று சமுதாயத்தில் மிக உயர்ந்த நிலையினை அடைய வேண்டும் என்று மாணவர்களை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள அவர், நேற்று விருதுநகரில் உள்ள அரசினர் குழந்தைகள் காப்பகத்தை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

பின்னர், மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர், சிறந்தமுறையில் கல்வி பயில்வதற்கு இந்த அரசு உதவி செய்ய எப்பொழுதும் தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த காப்பகத்தில் மாணவியர்களுக்கு தையல் வகுப்பு, தோட்ட வேலைகள், விளையாட்டு போன்றவற்றை தினசரி கற்றுத்தருவது பாராட்டுக்குரியது என்று அவர் கூறினார்.

இன்று, புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை திறந்து வைக்கும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், 35 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்டங்களையும் வழங்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் 51 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாநிலத்தில் பருவமழையை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் திருவல்லிக்கேணி உள்ளிட்ட சில இடங்களை நேற்று பார்வையிட்ட அவர், செய்தியாளர்களிடம் பேசினார்.

தமிழகத்தில் பருவமழையை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஆய்வுக்கூட்டம் ஓரிரு நாட்களில் நடைபெறவிருப்பதாகவும், எவ்வளவு பெரிய மழை வந்தாலும் அதனை சமாளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளுக்கு ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த மாதம் பெய்த மழையை எப்படி தமிழக அரசு சமாளித்ததோ, அதுபோல இந்த மழைக்காலத்தில் பெய்யும் பெருமழையை சமாளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக திரு. உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

>>>><<<<

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் நெகிழி தண்ணீர் புட்டிகள் மற்றும் குப்பைகளால் மறுசுழற்சி செய்யப்படும், ஆடை தயாரிப்பு நிறுவனத்தை மாநில மின்துறை அமைச்சர் திரு. செந்தில்பாலாஜி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி ஆகியோர் பார்வையிட்டனர்.

கரூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர்கள், காக்காவாடி பகுதியில் அமைந்துள்ள தனியார் நெகிழி மற்றும் குப்பைகளைக் கொண்டு மறுசுழற்சி முறையில் ஆடை தயாரிக்கும் நிறுவனத்தை பார்வையிட்டனர்.

எவ்வாறு குப்பைகளை தனித்தனியாக பிரித்து, நூல் தயார் செய்யப்படுகிறது என்பதை நேரில் கண்டறிந்தனர்.

முன்னதாக, வெளிநாட்டு ஏற்றுமதி ஆடைகள் விற்பனை மற்றும் மறுசுழற்சி முறையில் ஆடைகள் தயாரிப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

>>>><<<<

தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் இணையவழி பட்டா மாறுதல் சேவைகள் மூன்று மாதங்களுக்கு மேல் அரசு அதிகாரிகளின் முடிவிற்காக காத்திருப்பதாக வெளியான செய்திக்கு நிலஅளவை மற்றும் நில வரித்திட்ட இயக்குநர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

இணையவழியில் 16 லட்சத்து 41 ஆயிரத்து 19 மனுக்கள் பெறப்பட்டதாகவும், இதில் 15 லட்சத்து 65 ஆயிரத்து 85 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும், இன்றைய நிலையில் 75 ஆயிரத்து 934 மனுக்கள் நிலுவையில் உள்ளது என்றும், இவற்றில் 83 மனுக்கள் மட்டுமே மூன்று மாதங்களுக்கு மேல் நிலுவையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இணையவழி பட்டா மாறுதல், உட்பிரிவு இல்லாத இனங்களில் பதிவு செய்யப்படும் மனுக்கள் மீது 15 தினங்களுக்குள்ளும், இணையவழி பட்டா மாறுதல் உட்பிரிவு உள்ள மனுக்கள் மீது 30 நாட்களுக்குள்ளும் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக நிலஅளவை மற்றும் நில வரித்திட்ட இயக்குநர் கூறியுள்ளார்.

>>>><<<<

பிரபல திரைப்பட நடிகர் திரு. தில்லி கணேஷ், உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் காலமானார். அவருக்கு வயது 80.

தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் 400க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் அவர் நடித்துள்ளார்.

நடிப்பு மட்டுமின்றி சிறந்த டப்பிங் கலைஞராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

அவரது மறைவிற்கு திரைத்துறையினர் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

(சவுண்ட் பைட் - தில்லி கணேஷ் . . . 35 செகண்ட்ஸ்)

>>>><<<<

இருவரிச் செய்திகள்

இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினரிடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சியிலிருந்து கத்தார் நாடு விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளது. இருதரப்பும் நல்லெண்ணத்துடன் முயற்சிகளை எடுக்காமல் இருப்பதை தொடர்ந்து, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்நாடு தெரிவித்துள்ளது.

>>>><<<<

67வது கிராமி விருதுகளுக்கு இந்தியாவின் **Ricky Kej** மற்றும் **Anushka Shankar** ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

>>>><<<<

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் அருகேயுள்ள காட்டுக்குப்பம் பகுதியில் புதிய நீர்மின் நிலைய பணிகளுக்காக, எமரால்டு அணையிலிருந்து இன்று காலை 11 மணி முதல் வினாடிக்கு ஆயிரம் கனஅடி வீதம், 30 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுவதால், கரையோரத்தில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அம்மாவட்ட ஆட்சியர் திரு. லக்ஷ்மி பவ்யா கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

மாணவர்கள் சிறு வயது முதலே தேர்தல் நடைமுறைகளை தெரிந்து கொள்ளும் விதத்தில் திருப்பூர் அரசு பள்ளி மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் மாதிரி தேர்தல் நடத்தி காண்பிக்கப்பட்டது.

>>>><<<<

உதகை நகராட்சி ஆணையரிடம் 11 லட்சத்து 70ஆயிரம் ரூபாயை லஞ்ச ஒழிப்பு துறையினர் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றன.

>>>><<<<

நாகை மாவட்டம், புகழ்பெற்ற சிக்கல் சிங்காரவேலர் ஆலயத்தின் கந்தசஷ்டி விழாவை ஒட்டி, வள்ளி திருமணம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

தென்னாப்பிரிக்காவில் உள்ள **Gqeberha** வில் உள்ள **St. George park** மைதானத்தில் இப்போட்டி இன்றிரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 61 ரன் வித்தியாசத்தில் தென்னாப்பிரிக்க அணியை வென்றது.

நான்கு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் மூன்றாவது போட்டி, வரும் புதன்கிழமை அன்று செஞ்சூரினில் நடைபெறுகிறது.

நான்காவது மற்றும் இறுதிப்போட்டி வரும் வெள்ளிக்கிழமை ஜோஹன்னஸ்பர்க்கில் நடைபெறவுள்ளது.

>>>><<<<

ஹிமாச்சலப்பிரதேசத்தில் நடைபெற்ற பாரா க்ளைடிங் போட்டியில், அமெரிக்காவின் **Austin Cox** அனைத்து போட்டிகளிலும் வெற்றிபெற்று சாம்பியன் பட்டத்தை வென்றார்.

இந்தியாவின் **Ranjit Singh** இரண்டாவது இடத்தை பிடித்தார். போலந்து நாட்டின் **Dominik Kapica** மூன்றாவத இடத்தை பெற்றார்.

**>>>>END<<<<**